உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

## ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.


தொகுதி—சஉ.] பார்த்திப-ஸ்ரீ வைகாசிமீ [பகுதி—எ.

Vol. 42. May–June 1945. No. 7.


### உள்ளுறை.


| | | |
|---|---|---|
| தமிழ்நாட்டுமணம்:— | ஸ்ரீ. சி. கணேசையரவர்கள் ... | கஎ—க0ரு |
| அநுதாபக்குறிப்பு:— | பத்திராசிரியர் ... ... | க0ச |
| மேற்கானுடும் கீழக்கானுடும்:— | ஸ்ரீ. வை. சுந்தரேசவாண்டையாரவர்கள் | க0ரு—க0எ |
| மதிப்புரை:— | ... ... ... ... | க0அ—கக0 |
| ஒருதுறைக்கோவை யாராய்ச்சி:— | T. K. இராமாநுஜையங்கார், உதவிப்பத்திராசிரியர் | ககக—ககஉ |



பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1945.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by Thiru. Narayana Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

# ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,

மானேஜர்.

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி—சஉ.] பார்த்திப-ஞு வைகாசி-மீ [பகுதி—எ.

Vol. 42. May—June 1945. No. 7.

## தமிழ்நாட்டுமணம்

தமிழ்நாட்டிற் பண்டு (அஃதாவது தொல்காப்பியர்காலத்தும் அதற்குமுன்னும்) நிகழ்ந்த மணம் களவுமணம்மாத்திரமே என்பது சிலர்கருத்து. இவர்கள்கருத்துப் பொருந்தாதென்பது மிகப் பழைய தமிழ்நூலாகிய தொல்காப்பியத்தை நன்கு துருவிக்கற்ருர் அறிவர்.

அகத்திணையியலிலே கைக்கிளை ஐந்திணை பெருந்திணையெனத் திணை யேழென்று தொல்காப்பியர் வகுத்துக்கொண்டமையினுல், களவல்லாத ஏனைமணங்களும் நிகழ்ந்தனவென்பதும் பெறப்படும். ஆயினும், தொல். களவியல் உ0-ஆம் சூத்திரத்திலே "வேற்று வரைவுவரின் அது மாற்றுதற்கண்ணும்" என்றும், உங-ஆம் சூத்திரத்திலே "உலகுரைத்தொழிப்பினும்" என்றும், "பிறன் வரைவாயினும்" என்றும் வருவனவற்றை நோக்கும்போது இக் காலத்துப்போலவே அக்காலத்தும் சான்ருேரைமுன்னிட்டுப்பேசி வரைந்துகொள்ளும் வரைவுமணமே இயற்கையாக நிகழ்ந்ததென் பதும் அறியக்கிடக்கின்றது.

இன்னும்,

"கிழவோன் அறியா அறிவின ளிவளென
மையறு சிறப்பின் உயர்ந்தோர் பாங்கின்
ஐயக் கிளவி அறிதலு முரித்தே"

என்னுஞ் சூத்திரமே தமிழ்நாட்டிற் குலநலம் முதலியன விசாரித்து ஒருவனுக்குப் பெண்கொடுக்கும்முறையிருந்ததென்பதை நன்கு புலப்படுத்தும். இச்சூத்திரத்தின்கருத்து, "தம்மகள் தாமறியாவாறு ஒரு தலைவனோடு களவொழுக்கம் நிகழ்த்தியதை யறிந்த தாய், தம்மகளோடுகூடிக் களவொழுக்கம் நிகழ்த்திய தலைவன் தங்குலத்தில் உயர்ந்தவனோ தாழ்ந்தவனோ என்னும் ஐயம் உண்டாகச் சான்றோரிடத்தே அவன் குலநலம் முதலியவற்றை விசாரித்தறிந்து அவ்வையத்தை நீக்கிக்கொள்ளுவாள்" என்பது (எமதுகருத்து).

அன்றியும், களவியலில்,

"இன்பமும் பொருளும் அறனு மென்றாங்
கன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கிற்
காமக் கூட்டம் காணுங் காலை
மறையோர் தேஎத்து மன்ற லெட்டனுள்
துறையமை நல்லியாழ்த் துணைமையோ ரியல்பே"

என்னுஞ் சூத்திரத்து, "இன்பமும்பொருளும் அறனுமென்றாங்கு" என ஆசிரியர் இன்பத்தை வேறாகப் பிரித்துக்கூறிப் பின், "அன்பொடுபுணர்ந்த ஐந்திணைமருங்கிற் காமக்கூட்டம்" எனக் காமக் கூட்டத்தைப் பிரித்து, அவ்வின்பத்தின்பகுதியுளொன்றாகக் கூறுதலினாலும், களவுமண இன்பமன்றி ஏனைமணவின்பங்களும் ஆங்கு நிகழ்ந்தனவென்பதும் பெறப்படும்.

அங்ஙனேற் பேசிச்செய்யும்மணம் எதன்பாற்படுமெனின், இருவர்சுற்றமும் இயைந்துழித் தாமும் இயைதலிற் கந்தருவத்தின் பாற்படும். இதனைக் களவியல் க-ஆம் சூத்திரத்து நச்சினார்க்கினியர், "பொருளாற்கொள்ளும்மணமும் இருவர்சுற்றமும் இயைந்துழித் தாமும் இயைதலிற் கந்தருவத்தின்பாற்படும்" எனக் கூறுதலானும் அறிக. அங்ஙனேல், சங்கநூற்புலவர் யாவரும் அக் களவுமணத்தையே சிறப்பித்துப்பாடியதும், தொல்காப்பியர் அதற்கு இலக்கணம்வகுத்ததும் என்னை? எனின், ஆண் பெண் என்னும் இருவரும் தம்முள் எதிர்ப்பட்டுழி, உழுவலன்பான் ஒருவரையொருவர் காதலித்துக்கூடும் கூட்டமே யாவர்க்கும் இன்பம் பயத்தலானும், அக்காதல்மணத்தை நாடகவழக்கொடுகூட்டிக்கூறுங்கால்

அது கேட்போர்க்கும் இன்பம்பயத்தலானும் என்க. இதுபற்றியே குன்றம்பூதனரும் "காதற் காமம் காமத்துச் சிறந்தது" என்று புகழ்ந்துகூறினர்.

ஆயின் அவர் தொல்காப்பியத்தில் "இன்பமும் பொருளும் அறனுமென்றாங்கு" என்னுஞ் சூத்திரத்து, "மறையோர் தேஎத்து மன்றலெட்டனுள், துறையமை நல்லியாழ்த் துணைமையோ ரியல்பே" என்று கூறினரேனும், வடமொழிமறையிற்கூறிய கந்தருவத்தினும், தமிழிற்கூறிய களவுமணம் நாடகவழக்கொடுகூடிச் சிறந்திருத்தலும், கற்பொடுகூடிச்சிறந்திருத்தலும் பெறப்படும். கந்தருவம் கற்பொடுகூடாமலும் நிகழும் என்பது நச்சினர்க்கினியர்கருத்து.

தொல்காப்பியர், "நாடகவழக்கினும்.....................கலியே பரிபாட் டாயிரு பாங்கினும், உரிய தாகு மென்மனார் புலவர்" என்று கூறியதைநோக்கும்போது அவர் தமக்குமுன்னுள்ள அச் செய்யுள்வழக்கைநோக்கியே தாம் இலக்கணஞ்செய்தாரென்பதும், தாம் செய்த இலக்கணத்துள் எவ்வாறு நாடகஇலக்கணந்தழுவிய புலனெறிவழக்கினைநோக்கி மெய்ப்பாட்டியலைக்கூறினரோ அவ்வாறே உலகியலொடு நாடகவிலக்கணத்தையும் தழுவிய புலனெறிவழக்கினைநோக்கிக் களவிலக்கணத்தையும் கற்பிலக்கணத்தையும் கூறினரென்பது இச்சூத்திரத்தான் அறியப்படும். படவே, உலகியலாய் அருகிவழங்கிய களவினை இன்பம்பயக்குஞ்சிறப்புப்பற்றி எடுத்துக்கொண்டு அதனைச் சுவைப்படுத்தற்காக நாடகவழக்கினையுங்கூட்டிப் புலவர்கள் செய்யுள்செய்தனரென்பதும் அதுவே புலனெறிவழக்கு எனப்படும் என்பதும் துணியப்படும். அதனை இச்சூத்திரவுரையுள் இளம்பூரணர் "நாடகவழக்காவது, சுவைப்பட வருவனவெல்லாம் ஓரிடத்துவந்தனவாகத் தொகுத்துக்கூறுதல்; அஃதாவது, செல்வத்தானும் குலத்தானும் ஒழுக்கத்தானும் அன்பானும் ஒத்தாரிருவராய்த் தமரின் நீங்கித் தனியிடத்தெதிர்ப்பட்டு அவ்வழிக்கொடுப்போரும் அடுப்போருமின்றிவேட்கைமிகுதியாற் புணர்ந்தாரெனவும் பின்னும் அவர் களவொழுக்கம் நிகழ்த்தி இலக்கணவகையான் வரைந்தெய்தினரெனவும் பிறவும் இந்நிகரனவாகிச் சுவைப்படவருவனவெல்லாம் ஒருங்குவந்தனவாகக் கூறுதல். உலகியல்வழக்காவது:—உலகத்தார் ஒழுகலாற்றோடு ஒத்துவருவது"—

எனக் கூறுதலானே அறியப்படும். இங்கே உலகியலொழுகலாற்றோடு ஒத்துவருவது என்றதனாலே களவும் உலகத்தார் ஒழுகலாறே; வேறன்றென்பது பெறப்படும். எனவே களவுமணம் இக்காலத்துப்போலவே அக்காலத்தும் தமிழ்நாட்டிற் சிலரிடையே நிகழ்ந்ததென்பது பெறப்படும். இவ்வுண்மையை நச்சினார்க்கினியர் நன்கறிந்து உரைகூறினாரென்பது, "முதல் கரு உரிப்பொருளென்ற மூன்றே, நுவலுங் காலை முறைசிறந் தனவே, பாடலிற் பயின்றவை நாடுங் காலை" (தொல். அகத். ௩) எனும் சூத்திரவுரையுள் "இஃ தில்லதெனப்படாது உலகியலேயாம்; உலகியலின்றேல் ஆகாயப்பூ நாறிற்றென்றவழி அஃது சூடக்கருதுவாருமின்றி, மயங்கக் கூறினானென்று உலகம் இழித்திடப்படுதலின் இதுவும் இழித்திடப்படும். இச்செய்யுள்வழக்கினை நாடகவழக்கென மேற்கூறினார், எவ்விடத்தும் எக்காலத்தும் ஒப்பநிகழும் உலகியல்போலாது உள்ளோன் தலைவனாக இல்லதுபுணர்த்தல்முதலாகப் புனைந்துரைவகையாற்கூறும் நாடகவிலக்கணம்போல யாதானும் ஓரோவழி ஒருசாரார்மாட்டு உலகியலான் நிகழும் ஒழுக்கத்தினை எல்லார்க்கும் பொதுவாக்கி இடமும் காலமும் நியமித்துச்செய்யுள்செய்தலொப்புமைநோக்கி" என்று கூறுதலானே அறியப்படும்.

இனி, 'உலகில் ஒருசாரார்மாட்டு உலகியலான் நிகழும் ஒழுக்கத்தினை எல்லார்க்கும் பொதுவாக்கி' என்று நச்சினார்க்கினியர் கூறியதை உற்றுநோக்கும்போது களவுக்கிடமாகக் குறிஞ்சி நிலத்தையே அவர் பெரும்பான்மையும் கருதியுள்ளாரென்பது பெறுதும். குறிஞ்சியிற் பெண்கள் அந்நிலச்சார்புபற்றி அழகிற் சிறந்தவர்களாயிருந்தமையினாலும் தினைகாக்குமிடத்து அவர்களை எதிர்ப்படக்கூடியநிலைமையிருந்தமையினாலும் மறைவிற்கூடுதற்கேற்ற மலைமுதலிய அமைந்திருந்தமையாலும் அந்நிலத்தும் மற்றைநிலத்தும் வாழும் ஆண்மக்கள் அவர்களைக் காதலித்துக் களவுபுரியும்வழக்கிருந்ததென்பதும், களவுநிகழும்வழக்குமிருந்ததேனும் அந்நிலத்துமக்கள் மூத்து நரைமுதிர்ந்த மூதாளரைக் கொண்டு மணம்பேசுவித்துப் பெண்கொடுக்கும் இயல்பே வழக்கில் இருந்ததென்பதும் மேற்காட்டிய "பிறன்வரைவுநேரினும்" என்பது முதலிய சூத்திரங்களானே நன்கு தெளியப்படும்.

சிறுபான்மை நெய்தல்நிலத்தையும் இக்களவுக்கிடமாக ஆசிரியர்கள் கொண்டமை கடைச்சங்க இலக்கியநூல்களான் அறியப்படும். அதற்குக் காரணம் படுபுள்ளோப்பல் முதலிய நிமித்தம்பற்றி அந்நிலத்துமகளிரையும் தனியிடத்தெதிர்ப்பட்டுக் கூடுதற்கேற்ற நிலைமையிருந்தமையேயாம். இக்களவு ஏனைநிலங்களிலும் அருகியே வழங்கியுள்ளது. முல்லைநிலத்து ஏறுதழுவினார்க்கே மகளிர் உரியரென அந்நிலமக்கள் நியமித்ததனாலே அது ஆசுரமென்னும் மணமாயிற்று. ஆண்டும் சிறுபான்மை களவுநிகழினும் அவரும் ஏறடக்கியபின்னரே அவரை வரையப்பெறுவர். அதனை முல்லைக் கலி க-ஆம் செய்யுள் முதலியவற்றான் அறிக.

அங்ஙனேல் உலகியலானிகழ்ந்த இவ்வரைவுமணம் எவ்வாறு நிகழ்ந்ததெனின், அவ்வந்நிலத்துள்ளார் தமக்குள்வைத்துவழங்கிய சில சடங்குகளோடு நடந்திருக்கலாம். அகநானூற்றில் வரும்,

"உழுந்துதலைப் பெய்த கொழுங்களி மிதவை
பெருஞ்சோற் றமலை நிற்ப நிரைகாற்
றண்பெரும் பந்தர்த் தருமணல் ஞெமிரி
மனைவிளக் குறுத்து மாலை தொடரிக்
கனையிருள் அகன்ற கவின்பெறு காலைக்
கோள்கால் நீங்கிய கொடுவெண் டிங்கள்
கேடில் விழுப்புகழ் நாடலை வந்தென
உச்சிக் குடத்தர் புத்தகல் மண்டையர்
பொதுச்செய் கம்பலை முதுசெம் பெண்டிர்
முன்னவும் பின்னவும் முறைமுறை தரத்தரப்
புதல்வர்ப் பயந்த திதலையவ் வயிற்று
வாலிழை மகளிர் நால்வர் கூடிக்
கற்பினின் வழாஅ நற்பல உதவிப்
பெற்றோற் பெட்கும் பிணையை யாகென
நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி
பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தயங்க
*வதுவை நன்மணம் கழிந்த பின்றைக்
கல்லென் சும்மையர் ஞெரேரெனப் புகுதந்து

* வதுவைநன்மணம் — குளிப்பாட்டுக்கல்யாணம் என்பர் குறிப்புரையாசிரியர்.

பேரிற் கிழத்தி யாகெனத் தமர்தர
ஓரிற் கூடிய உடன்புணர் கங்குற்
கொடும்புறம் வளைஇக் கோடிக் கலிங்கத்
தொடுங்கினள் கிடந்த வோர்புறந் தழீஇ
முயங்கல் விருப்பொடு முகம்புதை திறப்ப
அஞ்சினள் உயிர்த்த காலை யாழநின்
நெஞ்சம் படர்ந்த நெஞ்சா துரையென
இன்னகை யிருக்கைப் பின்யான் வினவலிற்
செஞ்சூட் டொண்குழை வண்காது துயல்வர
அகமலி யுவகையள் ஆகி முகனிகுத்
தொய்யென விறைஞ்சி யோளே மாவின்
மடங்கொள் மதைஇய நோக்கின்
ஒடுங்கீர் ஓதி மாஅ யோளே"

என்னும் செய்யுள் பழைய மணநிகழ்ச்சியைக் குறிக்கும். களவின் பின் நிகழும் வரைவும் இவ்வாறு நிகழும். களவின்றியுங் கற்பு நிகழ்ந்ததென்பதைக் களவியல் கரு-ஆம் சூத்திரவுரையானும் அறியலாம்.

இனிச் சான்றோரைமுன்னிட்டு மணம்பேசிச்செய்யும் வழக்கின்று: களவுமணமே வழக்கெனின், அஃது தொல்காப்பியர்கருத்தொடு மாறுபடுமென்க. அதிநாகரிகமுறாத பண்டைக்காலத்தே விபரீதபுத்தி மிக அருகியதே. அக்காலத்தே தந்தைதாயரின் உடன்பாடின்றிப் பெண்மக்கள் ஒருவனைக் காதலித்துக்கூடி அவன் பின்னேசெல்வது மிக அருகியவழக்கென்பது இக்காலத்தும் அதிநாகரிகமுறாதநாட்டுவாழும் பெண்மக்களானே அறியலாம். 'சுருட்டுப்பாயும் முருட்டுப்பெண்ணும்' என்னும் பழமொழியும் இதனை வலியுறுத்தும். ஆதலினால் அதிநாகரிகமுறாத ஆதிகாலத்தே தமிழ்நாட்டிற் களவுமணமே இயற்கையாக நிகழ்ந்ததென்று கொள்வதும், அதுவே தமிழ்நாட்டார்மணமென்பதும் பொருந்தாதென்க.

ஆதிகாலத்திலே கரணமின்றியே தமிழ்நாட்டில் மணம் நிகழ்ந்ததென்பதை,

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரண மென்ப"

என்னும் தொல்காப்பியச்சூத்திரமே வலியுறுத்தும். செந்தமிழ் நாடாகவிளங்கும் நமது யாழ்ப்பாண முதலிய நாடுகளில் வாழும் தமிழ்மக்களுட் சிலர் காரணமின்றியும் மணம்நிகழ்த்துவார்கள். அதனைச் சோறுகொடுக்கும் கலியாணமென்பர். இதுபோலவே பண்டைக்காலத்துமணமும் நிகழ்ந்திருக்கலாம். தமிழ்க்கீழ்க் குடிகள்மணமும் பழையவழக்கைக் காட்டும்.

இனித் தொல்காப்பியர் நூல்செய்தகாலத்தின்முன்பே அஃதாவது அகத்தியர்காலந்தொடங்கியே ஆரியமொழிகளும் ஆரிய ஆசாரங்களும் தமிழ்நாட்டிற் கலப்புற்றனவென்பது தொல்காப்பியப் பாயிரத்துள்,

"நான் மறை முற்றிய
அதங்கோட் டாசாற்கு அரிறபத் தெரித்து" என்றும்

எழுத்ததிகாரத்துள்,

"அகத்தெழு வளியிசை அரிறப நாடி
அளவிற் கோட லந்தணர் மறைத்தே" என்றும்

சொல்லதிகாரத்துள்,

"இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்
றனைத்தே செய்யு ளீட்டச் சொல்லே" என்றும்
"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே" என்றும்

பொருளதிகாரத்துள்,

"அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்" என்றும்
"அந்த ணாளர்க் கரசுவரை வின்றே" என்றும்
"நூலே கரக முக்கோல் மணையே
ஆயுங் காலை அந்தணர்க் குரிய" என்றும்

கூறுமவற்றானும், பிறவும் வருவனவற்றானும் அறியப்படும்.

இங்ஙனம் தொல்காப்பியர் ஆரியமொழியோ டாசாரங்களையுந் தழுவிக்கூறினும், தமிழ்மரபு சிறிதும் தவறாதே தாம் நூல்செய்தாரென்க.

இங்ஙனம்,
சி. கணேசையர்.

# அநுதாபக்குறிப்பு.

தருமபுர ஆதீனத்து இருபத்துநான்காவது மஹாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஷண்முகதேசிகஞானசம்பந்தசுவாமிகள் 20–5–45ல் பரிபூரணமடைந்தமை தெரிந்து மிக வருந்துகிறோம். இவர்கள் தருமபுர ஆதீனகர்த்தராக வீற்றிருந்த காலம் பன்னிரண்டாண்டுகளேயெனினும், அதற்குள் இவர்கள் இயற்றிய பெரும்பணிகள் அளப்பிலவாகும். இவர்களாட்சிக்காலத்திலே ஆதீனத்தின் வருவாய் மிக்கது; சைவசித்தாந்தவுண்மைகளை யாவரும் அறிந்துகொள்ளும்படி விளக்கிவரும் "ஞானசம்பந்தம்" என்ற தமிழ்மாதப் பத்திரிகை தொடங்கப்பெற்றது; ஐம்பதுக்குமேற்பட்ட நூல்கள் அச்சிடப்பெற்று இலவசமாகவும் எளியவிலைக்கும் வழங்கப்பட்டன; ஆங்கிலம் பயின்றவர்களும் சித்தாந்தவிஷயங்களை அறிந்துகொள்ளுமாறு பல சித்தாந்தநூல்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பெற்றன; பல ஆலயத் திருப்பணிகள் நிகழ்ந்தன; சித்தாந்தமஹாநாடுகளும் திருமுறைவிழாவும் நடைபெற்றன; தமிழ்நாட்டுள் ஆங்காங்கு நிகழ்ந்த மஹாநாடுகளும் கழகங்களும் உதவி பெற்றன; இளைஞர் பயிலுதற்கேற்ற பள்ளிகள் நிறுவப்பட்டன; வறியவர் அறுசுவையுண்டி யாரவுண்டு மகிழ்ந்தனர்; தருமபுரம் எல்லாத் துறைகளிலும் எழில்மிக்கிலங்கியது. இவர்களது ஆட்சிக்காலத்தில் நிகழ்ந்த பத்தாவதாண்டுவிழாவிற் கூடிய பெருமக்கள் இவர்களைப் பாராட்டிய முறையால், வேறுவேறு கொள்கையுடைய பல பெருங்குழுவினராலும் நன்குமதிக்கப்பெற்ற இவர்களுடைய குணநலமுதலியவை நன்கு விளங்கும். உலகியலறிவொடு சமயநூலறிவும் வாய்ந்து திகழ்ந்த இவர்கள் பிரிவு தமிழ்நாட்டாரைப் பெரிதும் துன்புறுத்துவதாகும். இவர்களான்மா இறையடிநீழிலில் நிறைபணியாற்றி யின்புறுக. இவர்கள் பிரிவால் நேர்ந்த இன்னலெல்லாம் தீர இவர்களுக்குப்பின் இவ்வாதீனத்து இருபத்தைந்தாவது மஹாசந்நிதானமாகவீற்றிருக்கும் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிகஞானசம்பந்தசுவாமிகள் இவர்கள் மேற்கொண்ட பலவகைப்பணிகளையும் பிறவுயர்பணிகளையும் நலமிகப்புரிந்து நிலமிசை நீடுவாழ்க.

பத்திராசிரியர்.

# * மேற்கானாடும் கீழ்க்கானாடும்

திருவாளர். வை. சுந்தரேசவாண்டையாரவர்கள், திருவையாறு.

கி. பி. 985முதல் கி. பி. 1014வரை சோழமண்டலத்தை ஆண்ட முதலாம் இராசராசன்காலத்திலே காவிரிக்கும் நிவா என்னும் வெள்ளாற்றிற்கும் இடைப்பட்ட நிலப்பரப்பு இராசேந்திரசிங்க வளநாடு † என்னும் பெயருடையதாய் வழங்கப்பெற்றுவந்தது. இவ்வளநாட்டின் கீழ்ப்பகுதி முதற்குலோத்துங்கன்காலத்தில் ‡ விருதராசபயங்கரவளநாடு என்னும் பெயர் எய்திற்று. இப்பெயரே மூன்றாங்குலோத்துங்கனது ஆட்சியின் இறுதிக்காலம்வரை நிலவுவதாயிற்று. இவ்வளநாட்டின் உட்பிரிவுகளாகக் குறுக்கைநாடு இந்தளூர்நாடு முதலான நாடுகள் இருந்துவந்தன. இவற்றுள், கொள்ளிடத்திற்குத் தென்பாலுள்ள கடலங்குடியும், காவிரிக்கு வடகரையிலுள்ள திருவேள்விக்குடியும் குறுக்கைநாட்டில் அடங்கிய ஊர்கள் என்று கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. எனவே குறுக்கைநாடு என்பது காவிரிக்கும் கொள்ளிடத்திற்கும் இடைப்பட்டதாய், அட்டவீரட்டத்தலங்களுள் ஒன்றாய்விளங்கும் திருக்குறுக்கையைத் தலைநகராகக்கொண்ட ஒரு நாடாகும்.

---

* இத்தொடர் மேற்காநாடு, கீழ்க்காநாடு என்று கல்வெட்டுக்களிலே பொறிக்கப்பெற்றுள்ளது. திருத்தொண்டர்புராணத்தில், இந்நாட்டைக் குறிக்கவந்தவிடத்தும் மேற்காநாட் டாதனூர் என்று காணப்படுகிறது. ஆனால் சுந்தரர்தேவாரத்தில் கானாட்டு முள்ளூர் என்று பயின்றுவருகின்றது.

† வளநாடு பிரிக்கப்பட்டகாலம், முதலாம் இராசராசன் அரியணையேறிய 18-ஆம் ஆண்டு; அதாவது கி. பி. 1003 ஆகும்.

‡ இது, காவிரிக்கு வடபாலுள்ளதாகலின் வடகரை விருதராசபயங்கர வளநாடு என்றும் கல்வெட்டுக்களில் வழங்கப்பெறும். இங்ஙனமே, இராசேந்திரசிங்கவளநாடும் வடகரை இராசேந்திரசிங்கவளநாடு என்று வழங்கப்பெறும்.

இக்குறுக்கைநாட்டிற்கு நேர் வடபால் கொள்ளிடப்பேராற்றிற்கும் நிவா என்னும் வெள்ளாற்றிற்கும் இடைப்பட்டபகுதி கானாடாகும். இக்கானாடு, மேற்கானாடு கீழ்க்கானாடு என்னும் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. தேவாரம்பெற்ற பதிகளான * ஓமாம்புலியூர், † கடம்பூர், ‡ திருநெல்வாயில் அரத்துறை என்னும் ஊர்கள் மேற்கானாட்டில் அடங்கியனவென்று அவ்வவ்வூர்க் கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன.

மேற்குறித்த ஊர்களில் ஓமாம்புலியூருக்குக் கீழ்பால் சுமார் இரண்டுமைல் தூரத்திலுள்ள திருக்கானாட்டு முள்ளூர் என்னும் சிவன்கோயிற் கருப்பஇல்லின் வடபுறத்திற் பொறிக்கப்பெற்றுள்ள,

> § "ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் ராஜேந்திர சோழதேவற்கு யாண்டு 2-வது மகரநாயற்று பூர்வ பக்ஷத்து......ஞாயிற்றுக்கிழமையும் பெற்ற.........வடகரை விருதராச பயங்கர வளநாட்டு கீழ்க்காநாட்டு முள்ளூரான திருச்சிற்றம்பல சதுர்ப்பேதிமங்கலத்து இருக்கும்"

என்னும் கல்வெட்டுப்பகுதி இக்கானாட்டு முள்ளூர் கீழ்க்கானாட்டைச்சேர்ந்தது என்று அறிவிக்கின்றது.

---

* Annual reports on Epigraphy for the year-ending 31st March 1927.

† See 'TAMILPOLIL' under the heading of கடம்பூர்ச்சிவன்கோயிற் கல்வெட்டுக்கள்.

‡ Annual reports on Epigraphy for the year-ending 31st March 1929, page 24, Inscription Numbers 210 to 233.

§ இவ்வாண்டுக் கோடைவிடுமுறையில் 14—5—45) இத்திருக்கோயிற் கல்வெட்டுக்களை எழுதிவந்தேன். அவற்றுள் வேண்டிய அளவு ஈண்டுக் குறித்துள்ளேன். ஆண்டு அறிக்கையிலும் கீழ்க்காநாடு என்றே காணப்படுகின்றது. Annual report 1927.

எனவே இக்காலமுள்ள நாட்டின் பிரிவுப்படி தென்னார்க்காடு சில்லா சிதம்பரந்தாலூகாவிலுள்ள ஓமாம்புலியூரும் அதற்கு மேல்பாற்பட்ட பகுதியும் மேற்கானடு என்பதூம், இவ்வோமாம்புலியூருக்குக் கீழ்பாற்பட்ட திருக்கானட்டுமுள்ளூரும் அதற்குக் கீழ்பாற்பட்ட பகுதியும் கீழ்க்கானடு என்பதும் விளங்குவதாகும்.

இந்நாட்டை ஆராய்ந்ததனல் ஏற்படும் பயன்:— மேற்குறித்த ஓமாம்புலியூரிலே சகலபுவனசக்கரவர்த்தி கோப்பெருஞ்சிங்கதேவன் என்னும் பல்லவவேந்தன்காலத்துக் கல்வெட்டுக்கள் ஐந்துள்ளன. அவற்றுள்ளும் அங்குள்ள பிற கல்வெட்டுக்களுள்ளும் ஓமாம்புலியூர் மேற்கானட்டின் பகுதியாகவே குறிக்கப்பெற்றுள்ளது. இவ்வோமாம்புலியூருக்குமேற்கே சுமார் இரண்டுகல் தூரத்தில் கொள்ளிடம் இராசவாய்க்கால் வடகரையில் இருக்கும் ஆதனூரே திருநாளைப்போவார்புராணத்திற் சேக்கிழார்பெருமானுற் கூறப்பெற்றுள்ள மேற்கானட்டாதனூராகும். எனவே திருநாளைப்போவார் தோன்றிய பதியும் இதுவேயாகும்.

திருப்புன்கூருக்கு அண்மையிலுள்ள ஆதனூரைத் திருநாளைப்போவார்பதி என்று சிலர் கூறுநிற்பர். அது திருவாலிநாட்டு ஆதனூராகும். திருப்புன்கூரிற் பொறிக்கப்பெற்றுள்ள சகலபுவனசக்கரவர்த்தி கோப்பெருஞ்சிங்கதேவன் என்னும் பல்லவமன்னனது கல்வெட்டு அத் திருப்புன்கூரை, இராசாதிராசவளநாட்டுத்திருவாலிநாட்டுத் திருப்புன்கூர் என்று கூறுகின்றது. எனவே இத்திருப்புன்கூருக்கு அண்மையிலுள்ள ஆதனூர் திருநாளைப்போவார் பதியன்று என்பது ஒருதலை.

ஸ்ரீ:

# மதிப்புரை

சிவப்பிரகாசம்:— இது, சைவசித்தாந்தசாத்திரம் பதினான்கனுள் ஒன்று; கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியரால் இயற்றப்பெற்றது; பதி பசு பாச இலக்கணங்களையும் ஆன்மா இறைவனையடையுமாற்றையும் பஞ்சாக்கரத்தின்பெருமைமுதலியவற்றையும் போது, உண்மை என்னும் இரண்டதிகாரங்களில் நூறுசெய்யுட்களால் தெளிய விளக்குவது; விரிந்துபரந்த சிவஞானபோதம் சிவஞானசித்தியார் என்னும் நூல்களின் சுருக்கமாயமைந்தது; ஒவ்வொருசெய்யுளின்கீழும் அவ்வச்செய்யுட்பொருள்விளக்கும்படி திரு. கா. சுப்பிரமணியபிள்ளையவர்கள் (M.A., M.L.) எழுதியுதவிய ஆங்கில மொழிபெயர்ப்பு இணைக்கப்பெற்றது; தருமபுரஆதீனத்து இருபத்துநான்காவது மஹாஸந்நிதானமாகவீற்றிருந்த ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிகஞானசம்பந்த சுவாமிகள் நினைவுவெளியீடாக அவ்வாதீனத்து இருபத்தைந்தாவது மஹாசந்நிதானமாகவிளங்கும் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிகஞானசம்பந்தசுவாமிகள் உத்தரவால் வெளியிடப்பெற்றது; இந்நூலின்பெருமையும் தருமபுரத்து 24-வது மஹாஸந்நிதானத்தின்பெருமையும் விளங்கும்படி திரு. ச. தண்டபாணிதேசிகரவர்கள் எழுதிய தமிழ்முன்னுரையும், திரு. K. வஜ்ரவேலு முதலியாரவர்கள் எழுதிய ஆங்கிலமுகவுரையும் உடையது; சமயநூல்வழக்காற்றான் இதனுட்பயின்றசொற்களுக்கு வடமொழியுருவும் ஆங்கிலவிளக்கமும் காட்டும் அநுபந்தத்தோடுகூடியது; தமிழ்பயின்றோர்க்குமட்டுமன்றி ஆங்கிலமறிந்தோர்க்கும் பயன்படத்தக்கது. மக்கட்குச் சமயவுணர்ச்சியூட்டல் ஆதீனங்களின் சிறந்தகடமைகளுள் ஒன்றாகும். இப்பொழுது தருமபுர ஆதீனகர்த்தராயிலகுமவர்கள், சைவசமயவுண்மைகளை நன்குவிளக்கும் இந்நூலைத் தமக்குமுந்திய மஹாஸந்நிதானத்தின் நினைவுவெளியீடாக வெளியிடுவித்தது மிகவும் பாராட்டத்தகும். வேண்டுவோர் தருமபுரஆதீனத்திற் பெறலாம்.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்தநூற்பதிப்புக்கழகத்தின் 393, 394-ஆம் வெளியீடுகளாக அஞ்சல்முறை குழந்தைபேச்சு என்ற இரண்டுபுத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றையெழுதியுதவியவர் திருவாளர் வ. சுப்பையா அவர்களாவர். அவற்றுள் அஞ்சல்முறையென்பது தபால்வரலாற்றை விரிப்பது. தபால் இலாகாவிற் பலதுறைபற்றியும் அறிய வேண்டிய செய்திகளெல்லாம் இதனுள் நன்கு விளக்கி வரையப்பட்டுள்ளன. தபாற்றுறையுள் வழங்குஞ்சொற்களுள்ளே பல நாட்டிற் பெருவழக்காய்ப் பயின்றனவாயும் எளிதிற் பொருளுணர்த்துவனவாயும் இருப்பினும், அவை பிறமொழியாயிருத்தல்பற்றி அவற்றை இப்புத்தகத்துள் ஆளாது விலக்கி, ஆசிரியர் தாம் நூதனமாகப்படைத்து ஆளும் சொற்களிற் பல சிறுவர்களுக்கு எளிதிற் பொருள்விளங்காதனவாயும், நுவல்வோர்நாவுக்கும் கேட்போர் செவிக்கும் இன்னாதனவாயும், கவர்படுபொருளுடையனவாயும், தமிழ்நூன் முறையொடும் வழக்கியன்முறையொடும் மாறுகொள்வனவாயும், தமிழ் வழங்கும்நிலத்து யாண்டும் வழக்கில் இல்லாதனவாயும் காணப்படுகின்றன. பிறமொழிச்சொற்கள் வழங்குமிடத்துத் தமிழ்ச்சொற்களைப் படைத்தாளும் ஆசிரியர்நோக்கம் போற்றத்தக்கதெனினும், அவ்வாறு படைத்தாளும்சொற்கள் மேற்கூறிய குறைநீங்கிய செவ்விய தமிழ்ச்சொற்களாயிருப்பிற் சிறக்கும். மேலும், இப்புத்தகத்துள் 9-ஆம் பக்கம் 13-ஆம் வரியிலே கிழமை என்பது ஏழுநாள்கொண்ட ஒருகாலப்பிரிவைக் குறிக்குமென்று கருதி, வழங்கப்பட்டதாகத்தெரிகிறது. கிழமையென்பது உரிமையென்று பொருள்படும். அது ஏழுநாள்கொண்ட ஒரு காலப்பிரிவைக்குறித்தல் யாண்டும் கண்டதில்லை. ஞாயிற்றுக்கிழமையென்பது ஞாயிறு என்னும் கோளுக்கு உரிமை(யுடைய நாள்) என்றே பொருள்படும். ஆதலால் கிழமை என்பது இங்கே ஆசிரியர் கருதும் பொருளில் வாராது. குழந்தைபேச்சு என்பது, ஆசிரியர்குழந்தையொன்று இரண்டாவதாண்டுமுதல் மூன்றுவதாண்டுமுடியப் பேசிய பேச்சுக்களை அவர் கேட்டபடியே குறித்துவைத்து எழுதப்பெற்றதென்று அதன் பதிப்புரை கூறினும், அப்புத்தகத்துள்வரும்பேச்சுக்களை உற்றுநோக்கின் அவற்றுள்ளே பலபல மூன்றுவயதுக்குழந்தையின் தகுதிக்குவிஞ்சியனவாய்த் திருந்திய பெரியோர்பேசும்பேச்சாயுள்ளன. மேலும் இப்புத்தகத்துள் 12-ஆம் பக்கத்துள்வந்த இலக்கணக்குறிப்பு மூன்றுண்டுக்குழந்தையின்தகுதிக்கொவ்வாததாயிருத்தலோடு, எதிர்கால நிகழ்கால நிகழ்ச்சிகளை விரைவுபற்றி இறந்தகாலநிகழ்ச்சியாகவழங்கும் இலக்கணமரபை அழிப்பதாயும் இருக்

கிறது. 11-ஆம் பக்கத்து விடலையென்ற சொல் சூறையென்று பொருள் கொள்ளும்படி பதிக்கப்பட்டுளது. விடலையெறிதல் வேறு; சூறையிடல் வேறு. தேங்காய் பல சில்லுகளாக உடைந்து சிதறும்படியெறிதலை விடலை யெறிதல் என்பர். கொத்தாகவேனும் தொகுதியாகவேனும் உள்ள பொருள்களை வரையறையின்றி யாவருங்கொள்ளுமாறு வாரிவாரி வீசுதலைச் சூறையிடல் என்பர். ஆதலால் 'விடலை (சூறை)' என்று பதித்தது பொருந்தாது. 14-ஆம் பக்கத்துப் பொம்மையைக் குழந்தையாகவைத்துக்கொண்டு விளையாடும் சிறுமிபேச்சுள், 'பொம்மைக்கு வயிற்றுவலி, பொம்மை அழுகிறது, பொம்மைக்கு மருந்துகொடுக்கவேண்டும், பொம்மை மருந்தைக் கொப்புளிக்கிறது, பொம்மைக்குக் காய்ச்சல்' என்று பல இடங்களில்வருதல் காணலாம். பெரியோர் பொம்மையென்று வழங்குவதை இங்கே குழந்தையென்றுவழங்குவதே சிறுமியரியல்பாதலின் இங்கெல்லாம் குழந்தைபேச்சுள் பொம்மையென்றிருப்பது குழந்தையென்றிருத்தல் தகும். அன்றியும், இப்புத்தகத்துள் ஆங்காங்குக் 'கதவுத்தாளில்', 'லக்ஷுமி', 'முகஞ்சுழிப்பாள்' என்று அச்சுப்பிழைகளும் பிறவும் காணப்படுகின்றன. இவ்விருபுத்தகத்துள்ளும் இடையிடையே ஆசிரியர் தாம் ஆளும் சொற்களின் பொருள்விரிக்குங்கருத்தால் 'மாவட்(ஜில்லா)டத்தில்' என்றாங்குப் பதித்திருப்பதில், (ஜில்லா) என்பது போல இருதலையும் பிறைக்குறியிட்டுக்காட்டிய சொற்கள், உரைநடையொழுக்கினை இடையறுத்துச் சிதைப்பனவாயும், சொற்பொருள்விரிக்கும் முறையொடுபொருந்தாதனவாயும், சொற்களின் உருவையழிப்பனவாயும் உள்ளன. மேற்குறித்த 'மாவட்(ஜில்லா)டத்தில்' என்பதில் மாவட்டம் என்பதற்கு ஜில்லா என்று பொருள்விரிப்பதே ஆசிரியர்கருத்தாயின் உரைநடையில் மாவட்டத்தில் என்று பதித்துக் கீழ்க்குறிப்பில் 'மாவட்டம்-ஜில்லா' என்று பொருள்விரித்தல் அமையும். அன்றி உரைநடையொழுக்கருத வேறுமுறையாற் பதித்தலும் ஆம். அடுத்தபதிப்பில் இன்னோரன்னபிழைகள் திருந்தி இவ்விரண்டுபுத்தகமும் தமிழ்மக்களால் மிகவும் ஆதரிக்கப்பெறுமென்று நம்புகிறோம். இவற்றின் விலை :- அஞ்சல்முறை அணா 6. குழந்தைபேச்சு அணா 4. வேண்டுவோர் திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்தநூற்பதிப்புக்கழகத்திற் பெறலாம்.

ஸ்ரீ:

# ஒருதுறைக்கோவையாராய்ச்சி

கூ0-ஆம்பக்கத்தொடர்ச்சி.

சித்திரைச்செந்தமிழ்ப்பகுதியில் இக்கோவைப்பாடல்களுள் அச்சில்வராத 6 செய்யுட்கள் எட்டில் உள்ளபடி வெளியிடப்பட்டன. இனி, இந்நூலேட்டிற்கண்ட சிறந்த பிரதிபேதங்கள் வருமாறு:—

"தன்னம் புயத்திற் குவலயந் தார்முல்லை தாங்கிமன்னர்
சின்னம்பறித்த ரகுநாதன் றேவைச் சிலம்பி லின்று
பொன்னங் குடத்தை யெதிர்காண்ட லென்னமைப் போதுங்கண்டாற்
கன்னங் கறுத்த குழலாய்நற் காரியங் கைப்பலனே"*

என்பது இக்கோவையின் கஎ-ஆம் செய்யுளாகும். இதன் இரண்டாமடியிறுதி சிலம்பிலின்று என்று காணப்படுவது, சங்கத்துள்ள 490-ஆம் எட்டுள், சிலம்பினிறை என்று காணப்படுகிறது. இப்பாட்டின் பின்னிரண்டடியிற்கூறும்நிமித்தத்துக்கு, 'சிலம்பில் நிறை பொன்னங்குட'மென்ற எட்டுப்பாடம் மிகவும் அமைதியுடையதாகும். நிறை(பொன்னங்)குடம் நிமித்தப்பொருள்களுள் மங்கலப் பொருளாதல் வெளிப்படை. குறிப்புப்பொருளில் நிறைபொன் அம் குடம் என்றது நிறைந்த பொன்போலும் தேமல்பரவிய அழகிய குடம்போன்ற தனத்தை யுணர்த்தும். மைப்போது - கரிய (குவளை) மலர்போலும் கண்ணை யுணர்த்தும்.

'ககராசவீர' என்று தொடங்கும் 24-ஆம் பாடலின் ஈற்றடியுள் முற்பகுதி, 'மகராலயத்தின்' என்று அச்சுப்பிரதிகளிலும் சங்கத்து 490-ஆம் எட்டிலும் காணப்படினும், 537 - ஆம் எட்டுள்மட்டும் 'மகராசயத்தின்' என்று காணப்படுகிறது. இங்கு மகராலயம், மகராசயம் என்ற இரண்டுபாடமும் கடல் என்ற பொருளைத்தந்து அமையுமாயினும், 'மகராலயத்தின்' என்ற பாடத்தினும், 'மகராசயத்தின்' என்ற எட்டுப்பாடம், இப்பாட்டின்

*பாடலுள் பிரதிபேதம் உள்ள பகுதியைமட்டும் வரைந்து விளக்குதலே போதுமாயினும், முன்பின் தொடர்பு நன்கு புலப்படுதற்கும், இக்கோவைச் செய்யுட்களின் பலவகை நலங்களையும் ஒருசில செய்யுட்களாலேனும் செந்தமிழ்நேயர்கண்டு ரஸித்தற்கும் உதவுமென்று பிரதிபேதமுள்ள பாடல் முழுதும் பதிக்கலாயிற்று.

ஏனையடிகளோடொப்ப நான்காமெழுத்துவரையொன்றிய எதுகை நயமும் வாய்ந்ததாதலின் மிகவும் அமைவுடையதாகும். மகரம் - ஒருவகைமீன்; ஆசயம் - இடம் = கடல்.

27-ஆம் செய்யுளின் முதலடி, 'கீதங் குழல் கஞ்சம் வீணை தடாரி கிளந்த பஞ்சநாதம்' என்று அச்சுப்புத்தகங்களிலெல்லாம் ஒருபடியாகக் காணப்படுகிறது. சங்கத்துள்ள ஏட்டுப்பிரதியிரண்டினும் அவ்வடியின் இறுதிப்பகுதி 'கிளர்ந்த பஞ்சநாதம்' என்றே உளது. 'கிளந்த' என்ற பாடத்தினும், ஏட்டுப்பிரதிகளிற் கண்ட 'கிளர்ந்த' என்றபாடம் சிறக்கும். கிளர்தல்—எழுதல். கிளர்ந்த—எழுந்த. இப்பாடங்கொள்ளின் மிடறும், குழலும், கஞ்சமும், நரம்பும், மத்தளமும் ஆகிய ஐவகைக்கருவிகளினுமிருந்தெழுந்த ஒலியைந்தும் என அவ்வடிப்பொருள் இனிதியைதல் காண்க.

"ஆவியும் பூவும்" என்று தொடங்கும் 37-ஆம் செய்யுளின் மூன்றுமடியின் முற்பகுதி 'காவியங்கைபுனைந்தீர்' என்றே எல்லாப் பிரதிகளினும் இருப்பினும், அது 'காவியுங்கைபுனைந்தீர்' என்றிருப்பின் ஏனையடிகளோடொத்த எதுகைநயமும்வாய்ந்து சிறக்கும்.

சங்கத்துள்ள 490-ஆம் ஏட்டுள் இந்நூலின் 53-ஆம் செய்யுளாக,

"பாலாய சொல்லியர் பைங்குழற் கார்வெண் பளிக்குநிலை
மேலாய.தேவை ரகுநா யகன்கந்த வெற்பில்வஞ்சி
போலாய நுண்ணிடை யாய்மணிப் பாற்குடம் போல்வரில்மான்
மாலாய நானும்மை ... ... .. ௫௩"

என்று ஒரு பாடல் காணப்படுகிறது. இது பிற பிரதிகளில் இல்லை. இதன் ஈற்றடியினிறுதிப்பகுதியை வேறுபிரதிகள்நோக்கிப் பூர்த்தி செய்துகொள்ளும்படி ஏட்டில் இடம் விடப்பட்டுளது. வேறு பிரதிகளிற்கிடைக்கும் இவ்வடியின் இறுதிப்பகுதியால் இப்பாட்டின்பொருளும் அமைதியுறும்.

[தொடரும்]

T. K. இராமாநுஜையங்கார்,
உதவிப்பத்திராசிரியர்.